# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 9 புதன் 25.08.2021 மலர் - 2, இதழ் - 141


# வி.ஹெச்.பி. எதிர்ப்பு

விஷ்வ இந்து பரிஷத் இணை பொதுச் செயலாளர் சுரேந்திர ஜெயின் வெளியிட்டுள்ள அறிகையில், 'ஆப்கனில் போரால் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்த ஹிந்துக்கள், சீக்கியர்களுக்கு விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் தொண்டர்கள் உதவத் தயாராக உள்ளனர். அங்குள்ள ஹிந்துக்கள், சீக்கியர்கள் இடம்பெயர்வது இயல்பானது. ஏனெனில் அவர்கள் ஆப்கனில் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர். தலிபான்கள் அட்சியில் அங்கு சிறுபான்மையினர் வாழ்வது சாத்தியமில்லை. ஆனால் அந்த நாட்டின் முஸ்லிம்கள் நமது மண்ணிற்கு குடிபெயர்வதை நான் எதிர்க்கிறேன். வங்க தேசம், மியான்மரில் இருந்து தஞ்சம் கேட்டு பாரதம் வந்த ரோஹிங்கியாக்களைப் போன்றோர், இப்போது இங்கு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அதுபோல மீண்டும் நடந்துவிடக்கூடாது. எனவே,ஆப்கானிஸ்தானில் இருந்து முஸ்லிம்கள் வரக்கூடாது. அவர்களை ஏற்க எந்த முஸ்லிம் நாடுகளும்கூட தயாராக இல்லை. ஆப்கானிஸ்தானில் வாழும் அனைத்து முஸ்லீம்களும் ஹிந்துக்கள், சீக்கியர்களை சித்திரவதை செய்யவில்லை. ஆனால், அவர்கள் மீது கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, முஸ்லீம்கள் அங்கு மௌன சாட்சிகளாகவும் பார்வையாளர்களாகவும் கைதட்டுபவர்களாகவும்தான் இருந்தனர். எனவே, ஆப்கானிஸ்தானில் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைக்கு அவர்களுக்கும் சமமான பங்கு உண்டு' என கூறியுள்ளார்.



விஜயபாரதம்

# பாரதம் வந்த ஸ்ரீ குரு கிரந்த சாஹிப்

இந்திய விமானப்படை விமானத்தில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த சீக்கியர்கள், ஹிந்துக்கள் என 78 பேருடன் சீக்கியர்களின் புனித நூலான ஸ்ரீ குரு கிரந்த சாஹிப்பின் மூன்று ஸ்வரூப் (நூல்கள்) டெல்லி வந்தடைந்தது. மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி. முரளீதரன் மற்றும் ஆர்.பி.சிங் ஆகியோர் காபூலில் இருந்து கொண்டுவரப்பட்ட பழமையான ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப்பின் மூன்று ஸ்வரூப்பையும் பக்தியுடன் பெற்றுக்கொண்டனர். இந்த புனித நூல்கள், டெல்லியின் மகாவீர் நகர் பகுதியில் உள்ள குரு அர்ஜன் தேவ் ஜி குருத்வாராவுக்கு ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு அங்கு பாதுகாப்பாக வைக்கப்படும் என ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.



விஜயபாரதம்

# ராகுலை பாராட்டிய பா.ஜ.க. முதல்வர்





விஜயபாரதம்

இஸ்ரேலிய உளவு மென்பொருளான பெகாசஸ் ஸ்பைவேர் குறித்து பேசிய ராகுல் காந்தி, 'நான் அவர்களின் இலக்கு அல்ல. நான் பயப்படவில்லை. நான் பயப்பட மாட்டேன். இந்த நாட்டில், நீங்கள் ஊழல்வாதியாக திருடனாக இருந்தால் நீங்கள் மோடிக்கு பயப்படுவீர்கள். அப்படி இல்லை என்றால் நீங்கள் மோடிக்கு பயப்பட மாட்டீர்கள்' என்று கூறினார். இந்த வீடியோவை தனது டுவிட்டரில் பகிர்ந்துகொண்ட அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, 'ஊழல்வாதிகளுக்கும் திருடர்களுக்கும் மோடி அரசின் மீது பயம் இருப்பதாக ராகுல் காந்திகூட ஒப்புக்கொள்கிறார். ஒரு மாறுதலுக்காக அவர் உண்மையைப் பேசுவதைப் பார்க்க நன்றாக இருக்கிறது. இது இந்த ஒருமுறையோடு நின்றுவிடாது என நான் நம்புகிறேன்' என தெரிவித்துள்ளார்.

# வேண்டுதல் நிறைவேற்றினார் தாஹியா

ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கம் வென்ற மல்யுத்த வீரர் ரவி தஹியா, தனது பதக்கம் வெல்லும் கனவு நனவானதைத் தொடர்ந்து, தனது சொந்த ஊருக்கு சென்று அங்குள்ள கோயிலில் சிவலிங்கத்திற்கு ஜல அபிஷேகம் செய்து தனது வேண்டுதலை நிறைவேற்றினார். அந்த படம் இணையத்தில் வெளியானது. இதைக்கண்ட சில இணையதளவாசிகள் அவரை 'நிஜ வாழ்க்கை பாகுபலி' என்று குறிப்பிட்டுள்ளனர். முன்னதாக, தஹியாவின் குடும்பத்தினர் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் தஹியாவின் விருப்பத்தை நிறைவேற்ற அவர்களது வீட்டில் சிவனுக்கு அகண்ட ஜோதியை ஏற்றி வைத்து வழிபட்டனர் என்பதும், கடந்த 2020ம் ஆண்டில், ரவி தஹியா, தீபக் பூனியா தனது நண்பர்களுடன் உலகின் உயரமான இடத்தில் அமைந்துள்ள சிவன் கோவிலான உத்தரகாண்டின் துங்காநாத்திற்கு மலையேறி சென்று வழிபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பிழைகள் திருத்தப்படும்



விஜயபாரதம்

மத்திய அரசின் கண்காணிப்பில் உள்ள 'நௌ இந்தியா' (knowindia.gov.in) இணையதளத்தில் பாபர், அக்பர், ஔரங்கசீப் போன்ற முஸ்லிம் படையெடுப்பாளர்கள், ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியங்கள், ஹிந்துக்களுக்கு இழைத்த கொடுமைகள் மறைக்கப்பட்டு அவர்களை சிறந்த ஆட்சியாளர்களாக மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. இது சமூக வலைத் தளங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ் மூத்த பிரச்சாரகர் ரத்தன் சாரதாவும் இதனை சுட்டிக்காட்டியிருந்தார். நேற்று நமது விஜயபாரதம் மின்னிதழிலும் இது குறித்த செய்தி வெளியானது. இதனையடுத்து, கலாச்சார அமைச்சகம் அந்த வலைத்தளத்தை இயக்கவில்லை என்று அறிவித்தது. மேலும், வரலாற்று நிகழ்வுகளை துல்லியமாக சித்தரிக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.




விஜயபாரதம்

# எல்கர் பரிஷத் வழக்கு

புனே மாவட்டம் பீமா கோரேகானில் கடந்த 2018 ஜனவரி 1ல் போர் வெற்றி தின பேரணி நடந்தது. அப்போது இருத்தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை வெடித்தது. இதற்கு முந்தைய நாள் புனேவில் எல்கர் பரிஷத் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் வன்முறையை தூண்டும் வகையில் பேசினர். அதன் விளைவாகவே வன்முறை வெடித்தது என குற்றம்சாட்டப்பட்டது. மேலும் எல்கர் பரிஷத் மாநாடு நடத்தியவர்களுக்கும் மாவோஸ்டுகளுக்கும் தொடர்பு உள்ளது என்றும் கூறப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) சமூக ஆர்வலர்கள் சுதா பரத்வாஜ், வரவர ராவ், ஹனி பாபு, ஆனந்த் தெல்டும்டே, வெர்னான் கன்சல்வெஸ், கவுதம் நவ்லகா உள்ளிட்ட பலரை கைது செய்தது. இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட மாவோயிஸ்ட் ஆதரவாளர் ஸ்டான் சுவாமி சமீபத்தில் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார். இவர்கள் மீது உபா உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு தொடர்பான வரைவு குற்றப்பத்திரிகையை என்.ஐ.ஏ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில், கைது செய்யப்பட்டவர்கள் தடை செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்டு) இயக்கத்தை சேர்ந்தவர்கள். புரட்சி மூலம் மக்கள் ஆட்சியை அமைக்க முயற்சித்தனர். மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக போர் புரிய சதி செய்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைகழகம், மும்பை டாடா கல்வி நிறுவனம் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களில் இருந்து பயங்கரவாத செயல்களுக்கு மாணவர்களை தேர்வு செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

# மத்திய அமைச்சர் நாராயண் ராணே கைது



விஜயபாரதம்

சுதந்திர தின உரையின் போது, நாட்டின் எத்தனையாவது ஆண்டு சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம் என தெரியாத முதல்வர் உத்தவ் தாக்கரேவை, அங்கிருந்திருந்தால் நான் அறைந்திருப்பேன் எனக் கூறினார் மத்திய அமைச்சர் நாராயண் ராணே. இதனைத் தொடர்ந்து மும்பை உட்பட மகாராஷ்டிராவின் பல பகுதிகளில் நாராயண் ராணேவை கண்டித்து சிவசேனா தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சில இடங்களில் பா.ஜ.கவினருக்கும், சிவசேனாவினருக்கும் மோதல் ஏற்பட்டது. நாராயண் ராணேவுக்கு எதிராக சிவசேனா நிர்வாகிகள் காவல்துறையினரிடம் புகார் அளித்தனர். இதனால் அவர் மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். தன் மீது பதியப்பட்ட வழக்குகளை ரத்து செய்யுமாறு மத்திய அமைச்சர் நாராயண் ராணே, மும்பை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்நிலையில், நாராயண் ராணே மஹாராஷ்ட்ரா காவல்துறையால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

# பிரதமருக்கு கோரிக்கை

பேட்ரியாட்டிக் பீப்பிள் ஓரியண்ட் சைன்ஸ் அன்ட் டெக்னாலஜி குரூப் (பி.பி.எஸ்.டி) என்ற அமைப்பு, பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'உலகமே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள சூழலில், பாரதத்தில், ஆயுர்வேதம், சித்தா, யுனானி போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகள், தொற்று தடுப்பில் முக்கிய பங்காற்றியுள்ளன. தமிழகம் உட்பட தேசம் முழுதும், பல்வேறு பாரம்பரிய மருத்துவ முறையில் அரசு தனியார் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றனர். இதில் நோயாளிகள் அனைவரும் முறைந்த காலத்தில் குணமடைந்துள்ளனர். எந்த நோயாளியும் தீவிர சிகிச்சை நிலைக்கு செல்லவில்லை. எனவே, நோயை தடுக்கவும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் இந்த பாரம்பரிய மருத்துவ முறைகளை இலவசமாக அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து பொது மருத்துவமனைகளிலும், ஆரோக்கிய சேவை மையங்களிலும் இதனை அமல்படுத்த வேண்டும். இதன் மூலம், பாரம்பரிய மருத்துத்தின் செயல்திறனை உலகத்திற்கு கொண்டு செல்ல முடியும்' என்று கூறப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# மத்திய அரசுக்கு நீதிமன்றம் வேண்டுகோள்



விஜயபாரதம்

நொய்டாவைச் சேர்ந்த மோனிகா அகர்வால் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவில், புதிய விவசாய சட்டங்களை எதிர்த்து சுமார் ஒரு வருடமாக சாலைகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து விவசாயிகள் செய்துவரும் போராட்டம், பயணிகளுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி வருகிறது. தினமும் வேலைக்காக நொய்டாவில் இருந்து டெல்லிக்கு பயணம் செய்வது ஒரு பயங்கரமான கனவாக மாறிவிட்டது என தெரிவித்திருந்தார். இதனை விசாரித்த நீதிபதி, 'ஒரு இடத்தில் போராட்டம் நடத்த அவர்களுக்கு உரிமை இருக்கலாம், ஆனால் சாலைகளை இப்படித் தொடர்ந்து ஆக்கிரமித்து வைத்திருக்க அனுமதிக்க முடியாது. மத்திய அரசு, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் உடனடியாக இதற்கு ஒரு தீர்வை வகுக்க வேண்டும்' என உத்தரவிட்டார். முன்னதாக இதற்கு பதில் அளித்த உ.பி அரசு, சாலைகளைத் ஆக்கிரமிக்கும் சட்டவிரோதச் செயல் குறித்து விவசாயிகளுக்குப் புரிய வைக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன என்று கூறியிருந்தது. இந்த போராட்டங்களால் டெல்லி, உத்தரபிரதேசம், ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ரூ. 27,000 கோடிக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது. பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியுள்ளன என மத்திய அரசு முன்னர் தெரிவித்திருந்தது என்பது நினைவுகூரத்தக்கது.

# பசுக் கடத்தல்



விஜயபாரதம்

கர்நாடகாவில் உள்ள ஹசன் பகுதியில், ஒரு சிறிய சரக்கு வாகனத்தில் 50க்கும் மேற்பட்ட பசு, கன்றுகளை கடத்திச்சென்றனர். அவற்றின் கால்கள், வாய்களைக் கட்டி ஒன்றன் மீது ஒன்றாக படுக்கவைத்து அடுக்கி எடுத்து சென்றுள்ளனர். ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மின்கம்பத்தில் மோதியது. இதனால், வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 18 பசு, கன்றுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன. டிரைவர் அங்கிருந்து தப்பிவிட்டார். சம்பவம் நடந்த பேலூர் தாலுகாவில் உள்ள தியவப்பனஹள்ளி கிராம மக்கள், மீதமுள்ள காயமடைந்த கன்றுகளை மீட்டு பராமரித்து வருகின்றனர். இதில் ஈடுபட்டவர்களை கைது செய்ய அந்த கிராம மக்கள் போராட்டம் நடத்தினர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த காவல்துறை நூருல்லா, சலீம், சபீர், அகமது, இர்பான் உள்ளிட்ட 10 பேரை கைது செய்துள்ளனர். முன்னதாக கடந்த ஜூலையில் இதே ஹசன் மாவட்டத்தில் 38 குரங்குகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.இச்சம்பவம் குறித்து கர்நாடக உயர் நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணையை மேற்கொண்டது. 7 பேர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருத்தப்படும் அகராதி


விஜயபாரதம்

கேரளாவில் 1921ல் முஸ்லிம்கள், ஹிந்துக்கள் மீது நடத்திய கொடூர படுகொலைகள், கற்பழிப்புகள், மதமாற்றங்கள் மாப்ளா கலவரம் என அழைக்கப்படுகிறது. இதன் நூற்றாண்டு தற்போது அனுசரிக்கப்படுகிறது. இந்த கொடூர ஜிஹாத்தில் தலைமை வகித்த வரியம்குன்னத் குன்ஹமத் ஹாஜி மற்றும் அலி முசலியார் உள்ளிட்ட முஸ்லிம் பயங்கரவாதத் தலைவர்கள் சுதந்திர போராட்டத் தலைவர்களாக சுதந்திர போராட்ட வீரர்களின் அகராதியில் சித்தரிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் 'தற்போது, இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலால் (ICHR) வெளியிட்டுள்ள இந்த சுதந்திர போராட்ட வீரர்களின் அகராதி புத்தகத்தின் 5வது பதிப்பில் பழைய தவறுகளைத் திருத்த அந்த அமைப்பின் குழு பரிந்துரைத்துள்ளது' என ICHR'ன் ஆராய்ச்சி, நிர்வாகப் பிரிவு இயக்குனர் ஓம் ஜீ உபாத்யாய தெரிவித்துள்ளார்.

மேலும், 'இந்த படுகொலைகள் மத மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைவாத இயக்கம் நிகழ்த்தியது. எவ்வகையிலும் இது சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதி அல்ல. அக்குழுவினர் மாப்ளா படுகொலைகள் மூலமாக ஒரு கலிபாவை நிறுவ முயற்சித்தனர். அவர்கள் அம்முயற்சியில் வெற்றி பெற்றிருந்தால், பாரதம் அன்றே அப்பகுதியை இழந்திருக்கும். அப்போது ஷரியா நீதிமன்றத்தை நிறுவிய அவர்கள் ஏராளமான ஹிந்துக்களை படுகொலை செய்தனர். சுதந்திர போராட்ட வீரர்களின் பட்டியல் இதற்கேற்ப மாற்றப்படும். புதுப்பிக்கப்பட்ட அகராதி அக்டோபர் இறுதிக்குள் வெளியிடப்படும்' என தெரிவித்தார்.

ஓரிரு நாட்களுக்கு முன்பு, கேரள சட்டசபை சபாநாயகர் எம்.பி ராஜேஷ், வரியம்குன்னத் குன்ஹமத் ஹாஜியை பகத்சிங்குடன் ஒப்பிட்டு பேசினார். இதனையடுத்து அவர் மீது தேசத் துரோக வழக்கை பதிவு செய்ய பா.ஜ.க கோரியது நினைவிருக்கலாம்.



# சேம் சைடு கோல்

ஹரியானா, உத்தரகண்ட், உத்தரபிரதேசம் போன்ற பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகமாக உள்ளது. ஆனால் காங்கிரஸ் ஆளும் பஞ்சாப் மாநிலத்தில் விவசாயச் செலவுகள் அதிகமாக உள்ளபோதும் குறைந்தபட்ச ஆதரவு விலை குறைவாகவே கொடுக்கப்படுகிறது. விவசாயிகளின் ஒவ்வொரு பயிரின் விலையும், வளர்ப்புக்கான உள்ளீட்டு செலவும் ஆண்டுக்காண்டு அதிகரிக்கிறது. ஆனால் பஞ்சாப் அரசு, அதன் மாநிலத்தின் குறைந்தபட்ச ஆதரவு விலையினை 2017ம் ஆண்டு முதல் உயர்த்தவில்லை' என தெரிவித்துள்ளார். சித்துவின் இந்த கருத்து சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பஞ்சாப் முதல்வர் அமரிந்தர் சிங்கிற்கும் அம்மாநிலத் தலைவர் சித்துவுக்கும் இடையே பனிப்போர் நிலவி வரும் சூழலில் தற்போது அவர் பா.ஜ.கவை புகழ்ந்து பேசியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காஷ்மீரில் முக்கிய பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை






விஜயபாரதம்

முக்கிய லஷ்கர் இ தொய்பா கமாண்டர் முகமது அப்பாஸ் சேக் மற்றும் அவனது உதவியாளர் சகீப் மன்சூர் தார் ஆகிய இருவரும் நமது பாதுகாப்புப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இவர்கள் இருவரும் மிக முக்கிய ஏ+ வகுப்பை சேர்ந்த (A+ category) பயங்கரவாதிகள். காஷ்மீர் பதுகாப்புப்படை வீரர்களின் ரகசிய நடவடிக்கையை தொடர்ந்து ஸ்ரீநகரில் அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். அப்போது நடந்த துப்பக்கி சண்டையில் இவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். இந்த வருடத்தில் மட்டும் இதுவரை நூறுக்கும் அதிகமான பயஙகரவாதிகளை நமது பாதுகாப்பு படையினர் வீழ்த்தியுள்ளனர்.

# ஷரியத்தை அமல்படுத்த ஆலோசனை



விஜயபாரதம்

பிரிட்டனைச் சேர்ந்த முஸ்லிம் மதகுரு அஞ்செம் சௌத்ரி, மத வெறுப்புப் பிரசங்கி, ஜிஹாதி ஊக்குவிப்பாளர் என அறியப்படுபவர். அவர், 'தலிபான்களின் தலைமைக்கு நேர்மையான அறிவுரை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அதில், தலிபான்கள் உடனடியாக ஆப்கானிஸ்தானில் ஷரியா சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். இசை, பெண்கள் தனியாக வெளியே செல்வது அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும். அனைத்து நாட்டின் எல்லைகளும் நீக்கப்பட்டு ஒன்றுபட்ட இஸ்லாமிய தேசமாக மாற வேண்டும். இந்திய துணை கண்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் நாடுகளின் நிலங்களையும் ஒன்றிணைக்க, முஸ்லிம்கள், கிலாபத் இயக்கமாக அதிக ஒற்றுமையுடன் இணைய வேண்டும். ஆப்கனை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க, பிரிட்டன் படைகள் மீது உங்கள் துப்பாக்கிகளை திருப்புங்கள். அல்லாஹ்வின் ஆட்சியை அமல்படுத்துவதற்குத் தடையாக இருப்பவர்களை குறிவையுங்கள்' என எழுதியுள்ளார். முன்னதாக, பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை ஆதரித்ததற்காக அஞ்செம் சௌத்ரி, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டபோதும், அவருக்கு பொது இடங்களில் பேச தடை விதிக்கப்பட்டது. கடந்த மாதம் அவர் மீதான தடை நீக்கப்பட்டது. இதனால், மீண்டும் முஸ்லீம் அல்லாதவர்கள் மீதான தனது வெறுப்பை சுதந்திரமாக பரப்பி வருகிறார்.

# ஹமாஸ் அமைப்பிற்கு பதிலடி



விஜயபாரதம்

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கு இடையே பல ஆண்டுகளாக மோதல் இருந்து வருகிறது. பாலஸ்தீனத்தின் தன்னாட்சி பெற்ற பகுதியான காசா முனையில் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு ஆளுமை செலுத்துகிறது. இந்த அமைப்பினர் இஸ்ரேல் மீது அடிக்கடி ராக்கெட், ஏவுகணைகளைக் கொண்டுத் தாக்குதலை நடத்தி வருகின்றனர். அவ்வகையில், இரு தினங்களுக்கு முன் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட எரிவாயு பலூன்களை கொண்டு இஸ்ரேலின் வடக்குப்பகுதியில் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து, இஸ்ரேல் விமானப்படையினர் இதற்கு சரியான பதிலடி தாக்குதல் நடத்தினர். ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினரின் ஆயுத தயாரிப்பு மையங்கள், ராக்கெட் ஏவுதளங்கள் உள்ளிட்ட இடங்களை குறிவைத்து இஸ்ரேல் விமானப்படையினர் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் வெளியாகவில்லை எனினும் ஹமாஸ் அமைப்புக்கு பெருத்த சேதம் என்று கூறப்படுகிறது.

# அமெரிக்காவுக்கு தலிபான் எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் இருந்து, ஆகஸ்ட் 31க்குள் அமெரிக்க படையினர் வெளியேறுவார்கள் என, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முன்பு அறிவித்திருந்தார். ஆனால், சமீபத்தில், ஆப்கனில் இருந்து ராணுவத்தை முழுமையாக வெளியேற்றும் காலக்கெடு நீட்டிப்பு குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது என்றார். இது குறித்து கருத்துத் தெரிவித்த தலிபான்களின் செய்தி தொடர்பாளர் சுஹைல் ஷாஹின், அறிவித்தபடி, அனைத்து படைகளையும் ஆகஸ்ட் 31க்குள் அமெரிக்கா, பிரிட்டன் திரும்பப் பெற வேண்டும். கூடுதல் அவகாசம் கோரினால் அது நிராகரிக்கப்படும். மீறினால் அந்நாடுகள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்' என மிரட்டியுள்ளார்.

விஜயபாரதம்



# பின்வாங்கிய பல்கலைக்கழகங்கள்




விஜயபாரதம்

செப்டம்பர் 10, 11, 12 ஆகிய தேதிகளில் "உலகளாவிய இந்துத்துவத்தை அகற்றுவது" (Dismantling Global Hindutva) என்ற தலைப்பில் ஒரு மெய்நிகர் மாநாட்டை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 41 அமெரிக்க பல்கலைக்கழகங்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஸ்பான்சர் செய்தன. இது உலக அளவில் பெரும் சர்ச்சையை கிளப்பியது. ஆட்ரி ட்ருஷ்கே என்பவர்தான் கல்வியாளர் என்ற போர்வையில் ஹிந்துக்களுக்கு எதிரான இதுபோன்ற வெறுப்பு பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறார். இதனையடுத்து இதில் களம் இறங்கிய 'ஹிந்து அமெரிக்க அறக்கட்டளை' (HAF) என்ற அமைப்பு, 41 பல்கலைக் கழகங்களுக்கும் கடிதம் எழுதியது. அதன் ஆதரவாளர்கள், 'நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?' என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்தனர். 24 மணி நேரத்திற்குள் 6 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான கண்டனக் கடிதங்கள் இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பு நிறுவனமான டி.ஜி.ஹெச் இணையதளத்திற்கு அனுப்பப்பட்டது. இதனால், அதன் சர்வர்கூட முடங்கியது. இதனையடுத்து, ஹிந்துக்களுக்கு எதிரான இந்த வெறுப்பு மாநாட்டில் இருந்து உடனடியாக விலகுவதாக டால்ஹௌசி, பிரின்ஸ்டன், மாஸ் பாஸ்டன் ஆகிய மூன்று அமெரிக்க பல்கலைக்கழகங்கள் அறிவித்துள்ளன. மற்ற பல்கலைக் கழகங்களிடமும் நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை எடுத்துரைப்போம் என ஹிந்து அமெரிக்க அறக்கட்டளை அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# வலையில் சிக்கிய மீம்கள்






## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# தேசிய கண்தான வாரம்



விஜயபாரதம்

தேசிய கண் தான வாரம் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 8ம் தேதி வரை கொண்டாடப்படுகிறது. நாம் மறைந்த பின்னும் இந்த அழகிய உலகை நாம் காணும் வகையில், நமது உடலில் கண்களுக்கு மட்டும்தான் இறைவன் இறவா வரம் தந்துள்ளான். அதற்கு நாம் செய்ய வேண்டியது 'கண் தானம்'.

கண் தானம் குறித்த விழிப்புணர்வால் இன்று ஆயிரக்கணக்கானோர் தங்கள் கண்களை தானமாக தர உறுதி அளிக்கின்றனர். நம் நாட்டில் கண்புரைக்கு அடுத்ததாக கருவிழி பாதிப்பால் ஏற்படும் பார்வை இழப்பு அதிகமாக உள்ளது. கருவிழி பாதிப்பை, கருவிழி மாற்று அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். கருவிழி வெண்மையாக கொண்டு பிறக்கும் குழந்தைகள், கருவிழியில் தழும்பு ஏற்பட்டு பார்வை தடைப்படுபவர்களுக்கும் கருவிழி மாற்று அறுவை சிகிச்சையால் பார்வை கிடைக்க வாய்ப்புள்ளது.

ஒருவர் செய்யும் கண்தானம், இருவருக்கு கண் பார்வை கிடைக்க வழிவகுக்கிறது. பாரதத்தில் ஆண்டுக்கு இரண்டு லட்சம் கண்கள் தேவைப்படுகிறது; ஆனால் தானமாக பெறப்படுவது அதனை ஈடு செய்யும் விதத்தில் இல்லை. இவற்றிலும் 50 சதவீத கருவிழிகளே பயன்படுத்தும் நிலையில் உள்ளன. தாமதமாக கண்கள் பெறப்படுவது, இறந்தவரின் கண்களின் ஈரம் காய்ந்து போகவிடுவது போன்றவையே அனைத்தையும் பயன்படுத்த முடியாததற்கு காரணம்.

இது குறித்த விழிப்புணவு இன்மை, தாமதம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், கண் தானம் செய்ய உறுதிமொழி அளிப்பவர்களிடமும் சில நேரங்களில் கண்களை தானமாக பெற முடிவதில்லை. கண்தானத்தை ஊக்குவிக்க மருத்துவமனையில் கிரீப் கவுன்சிலர்கள் பணிறாற்றுகின்றனர். இறந்தவர்களின் குடும்பத்தினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி கண்களை தானமாக பெற தேவையான ஏற்பாடுகளை அவர்கள் செய்கின்றனர்.

கண்ணாடி அணிபவர்கள், கண்புரை உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள் என, யார் வேண்டுமானாலும் கண் தானம் செய்யலாம். ஒருவர், கண்தானம் செய்ய, தான் உறுதிமொழி அளிப்பது மட்டுமின்றி, தன் குடும்பம், உற்றார், உறவினர், பொதுமக்களிடமும் கண் தானம், பதிவு செய்யும் முறை, தானத்தின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது சிறந்த சமுதாய சேவைகளில் ஒன்று.

நமது உடலில் கண்களுக்கு மட்டும்தான் இறைவன் இறவா வரம் தந்துள்ளான். அத்தகையக் கண்களை தானம் அளித்து மற்றவர்களுக்கு பயன்படும் விதத்தில் வாழ்வோம்.

# திருமுருக கிருபானந்த வாரியார்



திருமுருக கிருபானந்த வாரியார் சிறந்த முருக பக்தரும் சிறந்த பக்தி சொற்பொழிவாளரும் ஆவார். தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் நாள்தோறும் ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்துவதையே தவமாகக்கொண்டு வாழ்ந்தவர். சமயம், இலக்கியம், பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். "அருள்மொழி அரசு", என்றும் "திருப்புகழ் ஜோதி" என்றும் அனைவராலும் பாராட்டப்பட்டவர்.

வாரியார் சுவாமிகள், தமிழ்நாட்டின், வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காங்கேயநல்லூர் என்னும் சிற்றூரில் மல்லையதாசருக்கும், கனகவல்லி அம்மையாருக்கும் பிறந்த பதினொரு பிள்ளைகளில் நான்காவது மகனாக அவதரித்தவர். வாரியார் சுவாமிகள் அமிர்தலட்சுமியைத் தனது 19வது வயதில் மணம்புரிந்தார். தந்தையாரே வாரியாருக்கு கல்வி, இசை, இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தந்தார். எட்டுவயதிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்றவர்.

தனது சங்கீத ஞானத்தால் அவர் கதாகாலட்சேபம் செய்யும் பொழுது திருப்புகழ், தேவாரம், திருவாசகம் முதலான பாக்களை இன்னிசையுடன் பாடினார். தன் தந்தையின் வழியில் வாரியார் சுவாமிகள் தமது 15ம் வயதிலிருந்தே சொற்பொழிவு செய்யும் திறம் உடையவரானார். 19ம் வயதிலிருந்தே தனியாகப் புராணப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார்.

அவருடைய பிரசங்கங்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கை ஒட்டியே அமைந்திருந்ததால், பாமர மக்களது உள்ளம் கவர்ந்தவரானார். சுவாமிகள் 1936ம் ஆண்டு தைப்பூச விழாவுக்கு வடலூர் சென்றிருந்த சமயம், சத்திய ஞான சபையில் அமர்ந்து "திருப்புகழ் அமிர்தம்' என்ற மாதப் பத்திரிகையை வெளியிடக்கருதி "கைத்தல நிறைகனி' என்று தொடங்கும் திருப்புகழுக்கு உரை எழுதினார். அது முதல் திருப்புகழ் அமிர்தம் திங்கள் இதழாகப் பிரசுரமாகத் தொடங்கியது.

அவர் இயற்றியுள்ள நூல்கள் ஏறத்தாழ நூற்றைம்பது. அவற்றுள் சிவனருட்செல்வர், கந்தவேள் கருணை, இராமகாவியம், மகாபாரதம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. குழந்தைகளுக்கு, "தாத்தா சொன்ன குட்டிக்கதைகள்' என்ற நூலை எழுதினார். பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும் வாரியார் எழுதியுள்ளார்.

1993 அக்டோபர் 19 அன்று வாரியார் இலண்டன் பயணமானார். 1993 நவம்பர் 7ல் பாரதம் திரும்பி வரும்போது விமானப் பயணத்திலேயே காலமானார். அவரின் பிறந்த ஊரில் கிருபானந்த வாரியாரைச் சிறப்பிக்கும் வகையில் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2021ம் ஆண்டிலிருந்து, இவரது பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.